2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244 (3) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய 2023, செத்தெம்பர் 27 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கோர்டொன் பிரேசர் லிமிட்டட் ஆனது சன்சைன் டீ (பிரைவட்) லிமிட்டட் உடன் ஒன்றிணைக்கப்படுவதாக பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்பட்ட ஒன்றிணைப்புச் சான்றிதழின் பிரகாரம் சன்சைன் டீ (பிரைவட்) லிமிட்டட் ஆக தொடர்ந்து இருக்கும். ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு அலுவலகம் கொழும்பு -03, தர்மபால மாவத்தை, இல. 60 இல் இருக்கும்.

சன்சைன் டீ (பிரைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப் பிரகாரம்,

பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.08, டிக்கெல் வீதி,
கொழும்பு -08.
2023, ஒற்றோபர் 24.

12-35

---

## அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 241(4)(டி) பிரிவின் கீழான அறிவித்தல்**

**ரெக்னிஸ் (லங்கா) பீஎல்சீ மற்றும் சிங்கர் இன்டஸ்டிரிஸ் (சிலோன்) பீஎல்சீ என்ற கம்பனிகளின் சிங்கர் (லங்கா ) பீஎல்சீ என்ற கம்பனியுடன் ஒன்றிணைத்தல்**

சிங்கர் (லங்கா) பீஎல்சீ (கம்பனி இலக்கம் PQ 160), ரெக்னிஸ் (லங்கா ) பீஎல்சீ (கம்பனி இலக்கம் PQ 191) மற்றும் சிங்கர் இன்டஸ்டிரிஸ் (சிலோன்) பீஎல்சீ (கம்பனி இலக்கம் PQ 104) என்ற கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் 2007 ஆம்

ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 239 ஆம் பிரிவின் படி ரெக்னிஸ் (லங்கா) பீஎல்சீ மற்றும் சிங்கர் இன்டஸ்டிரிஸ் (சிலோன்) பீஎல்சீ என்ற கம்பனிகள் சிங்கர் (லங்கா ) பீஎல்சீ என்ற கம்பனியுடன் ஒரு நிறுவனமாக ஒன்றிணைக்கப்படவுள்ளதாகவும் எதிர்காலத்தில் சிங்கர் (லங்கா) பீஎல்சீ என தொடர்ந்து இயங்கவுள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிங்கர் (லங்கா) பீஎல்சீ, ரெக்னிஸ் (லங்கா) பீஎல்சீ மற்றும் சிங்கர் இன்டஸ்டிரிஸ் (சிலோன் ) பீஎல்சீ என்ற கம்பனிகளின் இயக்குநர் சபைகளினால் இணைக்கப்படும் கம்பனிகளின் முன்மொழிவுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதிநிதிகள், பங்குதாரர்களின் அல்லது கடனாளர்களின் பரிசீலிப்புக்காக பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளின் பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளின் இருந்து கடப்பாடொன்றை உடையவரும் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளிடம் கேட்கும் பட்சத்தில் ஒன்றிணைக்கப்பட்ட யோசனையின் பிரதியொன்றை எந்தவித கொடுப்பனவுமில்லாது விநியோகிப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

இந்த ஒன்றிணைவு 2024 ஆம் ஆண்டு தை மாதம் 31ஆந் திகதி நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹெலிஸ் குரூப் சர்விசஸ் (பிரைவட்) லிமிடட்,

கம்பனிச் செயலாளர்கள்.
சிங்கர் (லங்கா) பீஎல்சீ , ரெக்னிஸ் (லங்கா) பீஎல்சீ மற்றும் சிங்கர் இன்டஸ்டிரிஸ் (சிலோன்) பீஎல்சீ,
இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு -10.

12- 39

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்**

இலங்கை, கொழும்பு, வண. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல நாஹிமி மாவத்தை, இல. 130, மஹா போதி மந்திரய எனும் இடத்தில் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் அனகாரிக தர்மபால அறக்கட்டளையின் அறங்காவலர்களாகிய நாங்கள், 2022, மார்ச் மாதம் 15 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. வீ.ஏ.சமரரத்ன என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல. 3136 என்ற அற்றோணித் தத்துவ பத்திரம் மூலம் தற்போது ஐக்கிய இராச்சியம், லண்டன் W4 3DF, சிஸ்விக் விலேஜ், இல.231 என்ற இடத்தில் குடியிருக்கும் காமினி அமரசேகர என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை எங்கள் விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் 2023, ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்கிறோம்.

சுதம்மிக ஹேவவிதாரன,
ராஜிவ் ஹேவவிதாரன,
சிங்ஹ ரத்னதுங்க,
லக்ஷ்மன் பெரேரா,
நளின் வல்பிட,
அமித விஜேசேகர.

கொழும்பு,
2023, நவெம்பர் 07.

12-124

**கவனிக்க.- 2023.11.24 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஆ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**சுற்றுலா மற்றும் காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத்திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

**பிராந்திய ஆய்வு அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2024**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2023.12.15ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பலாங்கொடை | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | பலாங்கொடையைச் சுற்றியுள்ள நகரம் | 2024.01.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | கலிகமுவ | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | கலிகமுவவைச் சுற்றியுள்ள நகரம் | 2024.01.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பெல்மதுல்ல | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | பெல்மதுல்லையைச் சுற்றியுள்ள நகரம் | 2024.01.01 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | லக்கலா | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் பொது அலுவலகம், கன்னொருவ, பேராதனை. | லக்கலவைச் சுற்றியுள்ள நகரம் | 2024.01.01 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.-** அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,300 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2023.12.15ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

டபிள்யூ. சுதத் எல்.சீ. பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருள வீதி, கொழும்பு 05,
2023.11.13.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2024**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2024

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :-------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :-----------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :---------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----------------------
-----------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :---------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:----------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :--------------------------------
05. இடத்தின் விஸ்தீரணம்:---------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கையும் தொடர்பான விபரங்கள் :---------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ?:-------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ?:-----------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) -------- :-----------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ?:---------------------------------------------------------.
11. தொலைபேசி தொடர்பு உள்ளதா ?:----------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11- 522

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்**

இல.21 ஐகோனிக் டெசிடென்சீஸ், இல. 110, பார்லிமென்ட் ரோட், ராஜகிரிய இல் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள COLOMBO INTERNATIONAL AIRPORT HOTELS (PRIVATE )LIMITED - PV 00203575 தமது அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்தை பதினைந்து கோடி தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாய் (1,59, 990.000) இதிலிருந்து மூன்று கோடியே பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் ரூபாவாக (31, 998,000.00) குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆம் பிரிவு விதிகளின்படி இத்தால் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

நிருவாக சபையின் உத்தரவுப்படி,

கார்ப்பரேட் டி சொலுடியோ
(பிவீஇ) எல்டீடி,

கம்பனிச் செயலாளர்.

11-481

**லோட்டஸ் டெக்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் - பிவி 90415**

**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242 இன் துணைப்பிரிவு (3) (b) இன் நியதிகளின்படி, லோட்டஸ் டெனனோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் (பதிவிலக்கம் பிவி 90415 ) மற்றும் சருவட எல் கே (பிரைவேட்) லிமிடெட் (பதிவிலக்கம் பிவி 00226687) என்பவற்றுடனான உத்தேசிக்கப்பட்ட ஒன்று சேர்க்கை பற்றிச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (1) என்னும் உட் பிரிவின் நியதிகளின்படியான பகிரங்க அறிவித்தல்

சருவட எல்கே ( பிரைவேட் ) லிமிடெட் (பிவி 00226687) என்பது லோட்டஸ் டென்னோலஜீஷ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) இன் முழுச் சொந்தமான துணை நிறுவனமாகும். 2023, நவெம்பர் 01 அன்று லோட்டஸ் டெக்னோலஜீஸ் (பிரைவேட்)

லிமிடெட் (பிவி 90415 ) மற்றும் சருவட.எல் கே (பிரைவேட்) லிமிடெட் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்)லிமிடெட் (பிவி 90415) ஒன்ற சேர்ப்பதற்கு லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) பணிப்பாளர் சபை தீர்மானித்தின் மூலம் லோட்டஸ் டெக்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் தொடர்ந்திருக்கும் என்பதுடன், 2024, சனவரி 01 ஆந் திகதி சருவட. எல்கே (பிரைவேட்) லிமிடெட் செயல்படாது.

இவ்வறிவித்தலிலிருந்து 20 நாட்களுக்குக் குறையாததாகவுள்ள ஒரு நாளன்று கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) வருவடஎல்கே (பிரைவேட்) லிமிடெட் (பிவி 00226687) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தைப் பதிவுசெய்வதற்காகக் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபரியிடம் கோப்பிடுவதனைப் பின்பற்றிக் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதி சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்றுசேர்க்கைச் சான்றிதழை வழங்குவதன் மேல் ஒன்று சேர்க்கை பயனுறும்.

* சட்டத்தின் 242( 4) ஆம் பிரிவின் நியதிகளின்படி லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) சருவட. எல்கே (பிரைவேட்) லிமிடெட் (பிவி 00226687) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதனை அங்கீகரிக்கின்ற சபைகளினாலான தீர்மானங்களாக அமைகின்றனவாகக் கருதப்பட வேண்டிய ஒன்றுசேர்க்கை உத்தேசத்தின் பிரதிகள் வழமையான வேலை நேரங்களின் போது இல. 102, 1/1, போங்ஷால் வீதி, கொழும்பு 11 இலுள்ள கம்பனிச் செயலாளரான கொபொரேட் டீ சொலுஷியோ (பிரைவேட்) லிமிடெட் அலுவலகத்தில் கம்பனியின் எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன்கொடுநரின் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளின் பரிசோதனைக்காக கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் கம்பனிக்குச் செய்யப்படும் கோரிக்கையின்மேல் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தின் பிரதியொன்று கட்டணமின்றி அவருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கொபோரேட் டீ சொலுஷியோ (பிரைவேட்) லிமிடெட்,

2023, நவெம்பர் 24.

செயலாளர்.

11-534

---

**சருவட. எல்கே (பிரைவேட்) லிமிடெட்**
**பிவி 00226687**
**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242 இன் துணைப்பிரிவு (3) (b) இன் நியதிகளின்படி, லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் (பதிவிலக்கம் பிவி 90415 ) மற்றும் சருவட. எல் கே (பிரைவேட்) லிமிடெ (பதிவிலக்கம் பிவி 00226687) என்பவற்றுடனான உத்தேசிக்கப்பட்ட ஒன்று சேர்க்கை பற்றிச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (1) என்னும் உட் பிரிவின் நியதிகளின்படியான பகிரங்க அறிவித்தல்
லோட்டஸ் டென்னோலஜீஷ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) என்பது சருவட. எல்கே ( பிரைவேட் ) லிமிடெட் (பிவி 00226687) என்பது இன் தாய் நிறுவனமாகும். 2023, நவெம்பர் 01 அன்று சருவட எல்கே ( பிரைவேட் ) லிமிடெட் (பிவி 00226687) மற்றும்லோட்டஸ் டென்னோலஜீஷ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்)லிமிடெட் (பிவி 90415) ஒன்று சேர்ப்பதற்கு சருவட. எல்கே ( பிரைவேட் ) லிமிடெட் (பிவி 00226687) ) பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் மூலம் லோட்டஸ் டெக்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் தொடர்ந்திருக்கும் என்பதுடன், 2024, சனவரி 01 ஆந் திகதி சருவட எல்கே (பிரைவேட்) லிமிடெட் செயல்படாது.

இவ்வறிவித்தலிலிருந்து 20 நாட்களுக்குக் குறையாததாகவுள்ள ஒரு நாளன்று கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) சருவட.எல்கே (பிரைவேட்) லிமிடெட் (பிவி 00226687) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தைப் பதிவுசெய்வதற்காகக் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபரிடம் கோப்பிடுவதனைப் பின்பற்றிக் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதி சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்றுசேர்க்கைச் சான்றிதழை வழங்குவதன் மேல் ஒன்று சேர்க்கை பயனுறும்.

* சட்டத்தின் 242( 4) ஆம் பிரிவின் நியதிகளின்படி லோட்டஸ் டென்னோலஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் (பிவி 90415) சருவட. எல்கே (பிரைவேட்) லிமிடெட் (பிவி 00226687) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதனை அங்கீகரிக்கின்ற சபைகளினாலான தீர்மானங்களாக அமைகின்றனவாகக் கருதப்பட வேண்டிய ஒன்றுசேர்க்கை உத்தேசத்தின் பிரதிகள் வழமையான வேலை நேரங்களின் போது இல. 102, 1/1, பேங்ஷால் வீதி, கொழும்பு 11 இலுள்ள கம்பனிச் செயலாளரான கொபொரேட் டீ சொலுஷியோ (பிரைவேட்) லிமிடெட் அலுவலகத்தில் கம்பனியின் எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன்கொடுநரின் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளின் பரிசோதனைக்காக் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் கம்பனிக்குச் செய்யப்படும் கோரிக்கையின்மேல் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தின் பிரதியொன்று கட்டணமின்றி அவருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

சருவட. எல்கே ( பிரைவேட் ) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கொபோரேட் டீ சொலுஷியோ (பிரைவேட்) லிமிடெட்,

2023, நவெம்பர் 24.

செயலாளர்.

11-543

---

**அறிவித்தல்**
**களம்பு கொன்சோடியம் லிமிடட்**
**(கம்பனி பதிவு இலக்கம் PB 5275)**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப PB5275 என்ற கம்பனி பதிவு இலக்கத்தை உடையதும் கொழும்பு -07, அலெக்சான்ட்லா பிளேஸ், இல. 47 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை உடையதுமான களம்பு கொன்சோடியம் லிமிடட் அதன் பெயரை “களம்பு கொன்சோடியம் (பிரைவட்) லிமிடட்” என 2015, ஓகத்து 15 ஆந் திகதியிலிருந்து மாற்றுவதற்கு 11(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிரைவட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

11-535

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 இற்கமைய பின்வரும் கம்பனி பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர்:* வீ அசிஸ்ட் (பீவீடீ) எல்டீடி
*கம்பனியின் புதிய பெயர்:* ஹைப்டெக் டிஜிட்டல் (பீவீடீ) எல்டீடி
*கம்பனியின் இல. :* PV 00238103
*பதிவு அலுவலகம்:* இல. 2/8, 1 ஆவது ஒழுங்கை, கல்வல வீதி, மிரிஹான, நுகேகொடை
*திகதி:* 2023.10.19

கம்பனிச் செயலாளர்.

11-573

---

**பொது அறிவித்தல்**

**சன்சைன் டீ (பிரைவட்) லிமிட்டட் (PV 204) ஐ கோர்டோன் பிரேசர் போசன்குவெட் அன்ட் ஸ்ரைன் லிமிட்டட் (PV 1192) உடன் ஒன்றிணைத்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய 2023, செத்தெம்பர் 27 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கோர்டென் பிரேசர் போசன்குவெட் அன்ட் ஜ்ரைல் லிமிட்டட் ஆனது சன்சைன் டீ (பிரவைட்) லிமிட்டட் உடன் ஒன்றிணைக்கப்படுவதாக பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளாரால் விநியோகிக்கப்பட்ட ஒன்றிணைப்புச் சான்றிதழின் பிரகாரம் சன்சைன் டீ (பிரைவட்) லிமிட்டட் ஆக தொடர்ந்து இருக்கும். ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு அலுவலகம் கொழும்பு 03, தர்மபால மாவத்தை, இல. 60 இல் இருக்கும்.

சன்சைன்டீ (பிரைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப் பிரகாரம்,

பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.08, டிக்செல் வீதி,
கொழும்பு -08,
2023,ஒற்றோபர் 24.

11-580

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பிட்டிகல, மெட்டிவிலிய, “சிரிகெலும் ” இல் வசிக்கும் தே.அ.அ.இல. 582730156V) கொண்ட மாகல கொட்டஹச்சிகே சரத் காமினி ( கடவுச்சீட்டு இல. N 5956214) கொண்ட நான், கட்டார் அரசின் ஆணையாளர் அலுவலகத்தில் 2021.03.08 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட 2021. 03.22 காலி பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தெற்கு வலய அலுவலகம், காலி எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணித் தத்துவப் புத்தகத்தின் 119 ஆம் வகுதியின் 74 ஆம் பக்கத்தில் 320 ஆம் திகதிய புத்தக இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் “கிரிகெலும்” மெட்டிவிலிய, பிட்டிகலவில் வசிக்கும் வலவே மாரம்பகே ரமனீ சந்திரிக்கா என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகாரம், அதிகாரப்பத்திரம் 2023.11.08 ஆந் திகதி முதல் இத்தால் இல்லாதொழிந்து, இரத்துச் செய்வதாக சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

மாகல கொட்டஹச்சிகே சரத் காமினி,
அற்றோணி அதிகாரி.

11-570

---

**கவனிக்க.- 2023.11.17 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**கல்வி அமைச்சு**

ஆங்கிலப் பாடத்துடன் பொதுக் கலைத் திறன் (வெளிவாரி) பரீட்சை/கலைமானி (வெளிவாரி) முதலாவது பரீட்சை மற்றும் விஞ்ஞானவியல் (வெளிவாரி) முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அரசாங்க பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளல் - 2022/2023 கற்கை ஆண்டு

2022/2023 ஆம் கல்வியாண்டு முதல் ஆரம்பிக்கப்படும் பின்வரும் பாடத்திட்டங்களை கற்பதற்காக இலங்கையின் அரசாங்க பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்வதற்காக ஆங்கிலப் பாடத்துடன் பொதுவான கலைத் திறன் (வெளிவாரி) பரீட்சை/கலைமானி (வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்ற அரசாங்க அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(i) கலைமானிப் பட்டத்திற்குரிய பாடத்திட்டம் (ஆங்கில பாடத்துடன்)
(ii) விஞ்ஞானமானிப் பட்டத்திற்குரிய பாடத்திட்டம் (உயிரியல் /பௌதீகவியல் /பயன்பாட்டுவியல்)

02. விண்ணப்பதாரர்கள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) (அ) கலைப் பட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்காக, 2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பிந்திய வருடங்களில் ஆங்கில பாடத்துடன் பொதுக் கலைத் திறன் (வெளிவாரி) பரீட்சை/ கலைமானி (வெளிவாரி) முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

(ஆ) உயிரியல், பௌதீகவியல் அல்லது பயன்பாட்டுவியல் போன்ற பாடத்திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக, 2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று ஆசிரியராக 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், உரிய ஆசிரியர் நியமனம் நிரந்தரமானதாக இருத்தல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தேசிய கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பட்டப் பாடத்திட்டத்தை கற்பதற்காக பதிவு செய்யப்படாமல் இருத்தல்.

(iv) ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே உள்ள உயிரியல், பௌதிகவியல் அல்லது பயன்பாட்டுவியல் பாடத்திட்டம் தொடர்பாக க.பொ.த (உயர் தர) பரீட்சை அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டப்படிப்பு முதலாவது தேர்வில் அல்லது சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் முன்தேவையாகக் குறிப்பிடப்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

(v) முழு நேர ஊதியத்துடன் கூடிய படிப்பு விடுப்புக்கு தகுதியுள்ள ஆசிரியராக இருப்பது.

03. அரச ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் சான்றளிக்கப்பட வேண்டியதுடன், அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட அதிபர்/முகாமையாளரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

04. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு பாடசாலை அதிபர்/முகாமையாளரினால் ஆசிரியர் தொடர்பாக கற்றல் விடுப்புக்கு ஒப்புதல் அளிக்கலாம்/முடியாது என்பதனை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

05. ஒவ்வொரு விண்ணப்பமும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், இரண்டு (02) பிரதிகளை 08.12.2023 க்கு முன்னர் “கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல” என்ற முகவரிக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் “இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2022/2023 (ஆசிரியர்களுக்கு)” எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

06. இந்த அனுமதியின் கீழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் திறனாய்வுத் தேர்வு (வெளிவாரி) பரீட்சையில்/கலைமாணி (வெளிவாரி) முதல் தேர்வு அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டப்படிப்பு முதல் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள், உரிய பாடத்திற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமாக நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள் மூலமாகவே ஆகும்.

07. ஊதியத்துடன் கூடிய படிப்பிற்கான விடுப்பை பெறுவதற்குள்ள உரிமை தொடர்பாக நேர்முகத்தேர்வின் போது விசாரிக்கப்படும்.

08. பட்டங்களைப் பெற்றவுடன் பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் பொறுப்பிற்கு இந்த அமைச்சு கட்டுப்படவில்லை.

விண்ணப்பப்படிவம் மூன்று மொழிகளிலும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் (www.moe.gov.lk) விசேட அறிவிப்பு நிரலில் வெளியிடப்பட்டுள்ளது.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

அலுவலக உபயோகத்திற்கு
மாத்திரம்

ஆங்கிலத்தைப் பாடமொன்றாக கொண்ட பொது கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில்
அல்லது விஞ்ஞான இளமாணி (வெளிவாரி) பட்டப் பாடநெறியின் முதலாவது பரீட்சையில்
சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான அனுமதி - கல்வியாண்டு 2022/2023

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :..........
   (ii) முழுப்பெயர் :..........

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :..........

3. பால் :..........

4. (i) பதவி :.......... (ii) தரம் :..........

5. முகவரி :..........
   (i) அலுவலக :..........
   (ii) சொந்த :..........

6. தொலைபேசி :
   (i) அலுவலக :..........
   (ii) சொந்த :..........

7. மின்னஞ்சல் முகவரி :..........

8. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இடம் :
   (i) பாடசாலை :..........
   (ii) வலயம் :..........
   (iii) மாவட்டம் :..........
   (iv) மாகாணம் :..........

9. (i) முதல் நியமனத் திகதி :..........
   (ii) நிரந்தரமாக்கப்பட்ட திகதி :..........
   (iii) சேவைக்காலம் (நியமனத் திகதியிலிருந்து விண்ணப்ப முடிவுத் திகதி வரை)
   வருடங்கள் :.......... மாதங்கள் :.......... நாட்கள் :..........

10. ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ள எண் :..........

11. (i) பிறந்த திகதி :
   திகதி :.......... மாதம் :.......... ஆண்டு :..........
   (ii) வயது (விண்ணப்பத்தின் முடிவுத் திகதி அன்று)
   வருடங்கள் :.......... மாதங்கள்:.......... நாட்கள் :..........

12. தகுதிகாண் பரீட்சையின் விபரங்கள் :
(பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுத் தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.)

   (i) பரீட்சை :..........
   (ii) பல்கலைக்கழகம் :..........
   (iii) பெறுபேறு :

| | பாடம் | தகுதிபெற்ற வருடம் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. நீர் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பட்ட பாடநெறியின் பெயரும் பாடங்களும் :
   (i) பட்டப்படிப்பு நெறியின் பெயர் :..........
   (ii) பாடங்கள் : 1. ..........
   2. ..........
   3. ..........

14. நீர் தெரிவு செய்யப்படின், அனுமதிக்கு எதிர்பார்க்கப்படும் பல்கலைக்கழகங்களின் பெயர்களை விருப்புரிமை ஒழுங்கில் குறிப்பிடுக.
   1. .......... 2. ..........
   3. .......... 4. ..........

15. ஏதாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றில், தேசிய கல்விக் கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வி நிறுவகத்தில் வேறு பாடநெறியொன்றிற்கு ஏற்கனவே பதிவு செய்துள்ளீரா என குறிப்பிடுக. ..........

“ஆம்” எனில், அதன் விபரங்கள் :
..........
..........
..........

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி மொழிகிறேன்.

..........
திகதி :-----. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

வண./ திரு./ திருமதி/ செல்வி .......... என்பவர் .......... இலிருந்து செயற்படத்தக்கதாக .......... இல் (பாடசாலையின் பெயர்) .......... ஆக (பதவி/ தரம்) சேவையாற்றுவதுடன், இப்பாடசாலையில் அவரது கடைசிச் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மேற்படி பட்டப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அவர் விடுவிக்கப்படலாம்/விடுவிக்கப்பட முடியாது.

விண்ணப்பதாரிக்கு அவசியமான கல்விக்கான லீவை நான் அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை.
(சிபாரிசு செய்யாவிட்டால், தயவு செய்து காரணங்களைக் குறிப்பிடுங்கள்.)
..........
..........
..........
..........

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

திகதி :.......... ..........
முகவரி :.......... அதிபர்.
(கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்)

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

திகதி :..........

முகவரி :..........

..........
வலயக் கல்விப் பணிப்பாளர்.
(கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்)

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

திகதி :..........

முகவரி :..........

..........
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
(கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்)

11-424

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk